திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலேயிருந்தாவது ஒரு பகுதி நேர ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அந்தப் பகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக ஆரம்பிப்பதைப் பொறுத்தவரை, 30,000 மக்கட்தொகை இருந்தாலொழிய நாம் செய்ய முடியாது. எனவே அந்தந்த ஒன்றியத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு நாம் கணக்கிடுகிறோம். அந்த ஒன்றியத்திலே 90,000 மக்கட்தொகை இருந்தால் 3 தான் இருக்கும். எனவே 1,20,000 என்று வருகின்றபோது கூடுதலாக இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் கொடுக்கமுடியும். எனவே இதுதான் நிலை. இந்த அளவிலேதான் செய்யமுடியும். அரசாங்கத்தினுடைய நிதிநிலைமையிலே இதற்கு மேலே செய்வதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 244,245 மற்றும் 246, மாண்புமிகு போக்குவரத்துத்துறை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 247, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

247—

தர்மபுரி மாவட்டத்தில் பட்டு முட்டைகள் விநியோகித்தல்

*14497—திரு கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பில் தனியாருக்கு போதிய பட்டு முட்டைகள் விநியோகிக்க பட்டு முட்டை விந்தகங்கள் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

TRUTH ALONE TRIUMPHS

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்று தர்மபுரி மாவட்டத்தில்தான் பட்டுப் பூச்சி வளர்ப்பு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பட்டு முட்டைகள் போதிய அளவு கிடைக்காத காரணத்தினால் வெளி மாநிலத்திலுள்ள பெங்களூர் நகரத்திலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே அந்த மாவட்டத்து முட்டை தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே மேலும் தனியார்களுக்குக் கொடுக்கக் கூடிய ஒரு நிலையை அரசு இந்த ஆண்டு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தற்போதைய தேவை 150.16 இலட்சம் பட்டு முட்டைகள் ஆகும். தற்சமயம் உற்பத்தியாகின்ற முட்டைகளின் அளவு 172.45 லட்சம். இன்னும் 4 ஆண்டுகளில் இது 235 லட்சமாக உயர்கின்ற வாய்ப்பு உள்ளது. ஆகையால் தர்மபுரி மாவட்டத்தில் புதிதாக பட்டு முட்டை உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னும் இரண்டு ஆண்டுக்காலத்தில் அதிகப்படியான முட்டைகள் உற்பத்தியாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் எவ்வளவு முட்டைகள் உற்பத்தியாகின்றதோ, அதே அளவிற்கு விவசாயிகளும் இதிலே அதிகப்படியாக ஈடுபடக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் குறிப்பாக தர்மபுரி, பென்னாகரம் பகுதிகளிலே இந்தத் தொழிலை விவசாயிகள் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது கிட்டத்தட்ட 10 தொகுதிகளிலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். இரண்டு கேள்வி கேட்கிறீர்கள். இரண்டு கேள்வியிலேயும் விரிவாகப் பேசினால் எப்படி நான் 20 கேள்விகளுக்கும் துணை வினாக்கள் அனுமதிக்க முடியும் ?

திரு. கா. பூ. முனுசாமி : 10 தொகுதிகளிலேயும் இந்த விவசாயிகள் பட்டுப் பூச்சிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் எவ்வளவு முட்டைகள் உற்பத்தியாகின்றதோ, அதே அளவிற்கு விவசாய மக்களும் கூடுவார்கள் என்பதால் அதை மீண்டும் பரிசீலனை செய்து தனியாருக்கு முட்டைகள் கொடுக்க பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உற்பத்தியாகின்ற முட்டைகளைவிட தேவை அதிகமாகின்ற சூழ்நிலை வருகின்ற நேரத்தில் அரசு அவசியம் இதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 248. திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

248——

பர்கூர் தொகுதியில் தோட்டக்கலை வேளாண்மைக் கல்லூரி ஆரம்பித்தல்.

*20128—திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதியில் தோட்டக்கலை தொடர்பான வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு வேளாண்மைக் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் பெரியகுளம் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு தோட்டக்கலைக் கல்லூரிகள் இயங்கி வருவதாலும். கடந்த சில ஆண்டுகளாக தோட்டக்கலை பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாலும் தமிழ்நாட்டில் எங்கும் தோட்டக்கலை தொடர்பான வேளாண்மைக் கல்லூரி துவங்கும் வாய்ப்பு தற்பொழுது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தர்மபுரி மாவட்டம் தமிழகத்திலே பின்தங்கிய மாவட்டமாக இன்றைக்கு இருக்கிறது. அங்கு படித்தவர்களுடைய சராசரி 47 விழுக்காடு. இந்த மாநிலத்தினுடைய படித்தவர்களுடைய சராசரி 67 விழுக்காடு. ஆகவே கல்வியிலே பின்தங்கி இருக்கின்ற அந்த மாவட்டத்தை அனைத்து துறைகளிலும் கல்வியிலே முன்னேற்றவேண்டும் என்பதற்காக இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த தர்மபுரி மாவட்டத்திற்கு பல கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள்: பள்ளிக்கூடங்களைக்